# இலங்கையின் இனமுரண்பாடும் சமாதான முன்னெடுப்புக்களும்

வேலுப்பிள்ளை குணரத்தினம்
சமூகவிஞ்ஞானத்துறை
கிழக்குப்பல்கலைக்கழகம்

## 1.0 அறிமுகம்

மனித வாழ்க்கையில் எந்த நிலையிலும் நிகழக்கூடிய ஒன்றாக முரண்பாடு திகழ்கின்றது. இதனால், சண்டைகள், கலகங்கள், புரட்சிகள், படையெடுப்புக்கள், யுத்தங்கள் என்பன போன்றவை ஏற்படுகின்றன. குறிப்பிட்ட இலக்கினை அடைவதில் ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் அல்லது குழுக்கள் முரண்பட்டு இருக்கும் சந்தர்ப்பத்தில் அவ்விலக்கினை அடைவதில் காணப்படும் ஒவ்வாமைகள் முரண்பாடுகளை உண்டுபண்ணக் காரணமாக அமைகின்றன. இத்தகைய முரண்பாடுகள் உலகிலுள்ள சமுதாயங்களில் இனரீதியாகவோ, மதரீதியாகவோ, சாதிரீதியாகவோ, பிரதேசரீதியாகவோ காணப்படும். இந்தவகையில், இலங்கையில் இனங்களுக்கிடையே இனமுரண்பாடு தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்துள்ளது. அத்துடன், இனமுரண்பாட்டினை தீர்ப்பதற்கு பல்வேறுபட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

## 1.1 இனமுரண்பாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்

இலங்கையை பிரித்தானியர் ஆட்சி செய்து கொண்டிருந்த வேளையில் ஆங்கிலம் கற்ற உயர் குழாம் மத்தியில் நாடு சுதந்திரம் பெறுவதற்கான ஒருமித்த மனப்பான்மை தோன்றியது. இந்த மனப்பான்மை வேறுபட்ட இன, மத வேறுபாடுகளை ஊடறுப்பதொன்றாக விளங்கியது. அதன் வெளிப்பாடு என்று கூறக்கூடிய வகையில் 1919ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கை தேசிய காங்கிரஸ் என்ற சுதந்திர போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான ஒரு மிதவாத அமைப்பு நிறுவப்பட்டது. இன்னொரு வகையில் கூறின், வெளிநாடுகளில் சென்று உயர்கல்வி கற்று வந்த அல்லது ஆங்கில அறிவைப் பெற்று இருந்த தமிழ் - சிங்கள உயர் வகுப்பினரால் அந்நிய ஆட்சிக்கு எதிராக அல்லது, சில அரசியல் உரிமைகளைச் சீர்திருத்தங்களினூடாக பெறும் நோக்குடன் அமைக்கப்பட்டதே இலங்கை தேசிய காங்கிரசாகும். உண்மையில் நிருவாகப் பொறுப்புக்களை பெற்றுக்கொள்வதே இலங்கை தேசிய காங்கிரசின் முதனிலை நோக்காக இருந்த அதேவேளை இலங்கை சுதந்திரம் பெறுவது என்பது இரண்டாந்தரத்தையே அடைந்து இருந்தது. பேராசிரியர் ஏ. ஜே. வில்சன் (A. J. Willson) கருத்துப்படி நோக்குகையில் "பிரித்தானியர் ஆட்சியின் கீழ் வழங்கப்பட்ட பொதுத்துறை நிருவாக உத்தியோகங்களை பெற்றுக் கொள்வதே இலங்கை தேசிய காங்கிரசில் அங்கம் வகித்த தமிழ் - சிங்கள தலைவர்களின் குறிக்கோளாக இருந்ததே தவிர இலங்கைக்குப் பூரண சுதந்திரம் பெற்றுக் கொடுப்பதாக இருக்கவில்லை."

இலங்கை தேசிய காங்கிரசின் முதலாவது தலைவராக பொன்னம்பலம் அருணாசலம் தெரிவு செய்யப்பட்டார். இப்பதவிக்கு பொன்னம்பலம் அருணாசலம் மிகவும் பொருத்தமானவர் என சிங்களத் தலைவர்கள் மனப்பூர்வமாக விரும்பினார்கள். அருணாசலம் சுதந்திரப் போராட்டத்துக்கான அமைப்பாக மாத்திரம் இதைக்கருதவில்லை. தேசிய ஒருமைப்பாடு, இன ஒற்றுமை நன்கு வேரூன்றிச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் கொண்டு இருந்தார். ஆனால், அவருடைய எண்ணம் ஈடேறாமல் போய்விட்டது. தேசிய காங்கிரஸ் தோற்றம் பெற்றமையும், அருணாசலம் அதன் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டமையும், இலங்கையில் இருந்த பெரும் சமூகங்களுக்கிடையிலான இணக்கத்தின் உச்ச நிலையை எவ்வாறு பிரதிபலித்தனவோ அதேபோல், 1921ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அருணாசலம் தேசிய காங்கிரசுடனான தனது தொடர்புகளை முறித்துக் கொண்டு அதில் இருந்து வெளியேறத் தீர்மானித்தமை சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையிலான ஒரு பிரிநிலைக்கோடு என வர்ணிக்க முடியும். குமாரி ஜெயவர்த்தனா (Kumari Jayawardena) "முழுமையான தேசிய வாதமாகவோ அல்லது விடுதலை இயக்கமாகவோ மலராது, பெரும்பான்மை இனத்தின் கலாசார, மதக்கோட்பாட்டுக்குள் அடக்கப்பட்டது. பின்னர் சிறுபான்மையோருக்கு எதிராக சீரழிந்தது" என்றார்.

இலங்கை தேசிய காங்கிரசில் பிளவு ஏற்படுவதற்கு முன் அல்லது அந்நியர் ஆட்சிக் காலத்தில் தமிழ் - சிங்கள மக்களிடையே சிறு, சிறு கருத்து முரண்பாடுகளும் பிரச்சினைகளும் உருவாகிய போதும் அவை நீண்ட காலத்துக்கு நிலைத்து நிற்கும் பிரச்சினையாக உருவெடுக்கவில்லை. 20ம் நூற்றாண்டின் முதல் இரு தசாப்பதங்களும் தமிழ் - சிங்கள மக்களிடையே குறிப்பிடத்தக்களவு பிரிவினைகள் ஏற்படவில்லை. 1910ம் ஆண்டு முதன் முதல் குறு – மக்கலம் சீர்திருத்தத்தின்கீழ் படித்த இலங்கையருக்கு சட்ட நிருவாக சபையில் இடமளிக்கப்பட்டபோது அக்கால சிங்கள மக்களிடையே மிகவும் புகழ் பெற்றிருந்த சேர் மாக்கஸ் பெர்ணாடோவுடன் போட்டியிட்ட முதுபெரும் தமிழ் அரசியல் தலைவரான சேர். பொன். அருணாசலம் தெரிவு செய்யப்பட்ட நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கது. அருணாசலம் தெரிவு செய்யப்பட்டமை மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை திட்டத்தினாலும் ஏனைய சில அரசியல் காரணிகளினாலும் என பலர் வாதிட்ட போதிலும் ஒரு சிறுபான்மை இனத்தைச் சார்ந்தவர் பெரும்பான்மை சமூகத்தின் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்டமை இன்றுவரையிலான ஒரு பாரிய எடுத்துக்காட்டாகும். முதலாம் உலகப்போர் நடந்து கொண்டிருக்கையில் 1915ஆம் ஆண்டு சிங்கள – முஸ்லீம் கலவரம் ஏற்பட்டது. இந்தியப்படையினது உதவி கொண்டு பிரித்தானியர் அதனை ஈவிரக்கமின்றி அடக்கிவிட்டனர். இவ்வேளையில் தான் பிரித்தானிய தேசாதிபதியின் கடும் நடவடிக்கைக்கு எதிராக எழுந்த கண்டன இயக்கத்துடன் பொன். அருணாசலம் உழைத்தார். லண்டன் வரை சென்று முறையிட்டு சிங்கள மக்கள் சார்பில் பெருமளவு நன்மைகளைப் பெற்றுக்கொடுத்தார். ஆகவே சிங்கள மக்கள் தமிழ்த்தலைவருக்கு செலுத்திய ஆதரவு தமிழ்தலைவர்கள் சிங்கள மக்களுக்குக் காட்டிய ஆதரவு இரு இனங்களுக்கிடையே காணப்பட்ட இன ஒற்றுமையை வெளிக்காட்டுகின்றன. ஆனால் இத்தகைய போக்கு பின்னர் பிளவடைந்து சென்றமை மிகவும் வருந்தத்தக்க சம்பவமாகும்.

இலங்கை தேசிய காங்கிரசில் இனப்பிளவுகள் ஏற்படுவதற்கு இரு காரணங்கள் பெரும் செல்வாக்குச் செலுத்தின. அவையாவன,

1. இலங்கைத் தேசிய காங்கிரஸில் அங்கம் வகித்த சிங்கள – தமிழ்த் தலைவர்களிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடு அல்லது, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இல்லாமை.

2. பிரித்தானியருடன் எப்போதும் தொடர்புபடுத்திப் பேசப்படும் பிரித்தாளும் கொள்கை.

சட்ட நிருவாக சபையில் இலங்கையருக்கு பிரதிநிதித்துவம் அளிக்க முற்படுகையில் சிங்களத் தலைவர்கள் பிரதேசவாரிப்பிரதிநிதித்துவத்தை வேண்டிநின்ற அதேவேளை, தமிழ்த் தலைவர்கள் தமக்கு சார்பான இனவாரிப் பிரதிநிதித்துவத்தை வேண்டி நின்றனர். 1920ஆம் ஆண்டு அரசியல் திட்ட சீர்திருத்தத்துக்கான தனது பிரேரணைகளை முன்வைக்கும் போது 'மனிங்' எந்தவொரு தனிச் சமூகமும் மற்றைய சமூகங்களின் மீது தனது விருப்பத்தை திணிக்காதவாறு இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் இச்சீர்திருத்தம் இனவாரிப் பிரதிநிதித்துவத்தை அளிப்பதாக கூறினார்.

மனிங்கின் இத்தகைய கொள்கையை இலங்கை தேசிய காங்கிரசில் இருந்த சிங்களத் தலைவர்கள் பலமாக கண்டித்தனர். இத்தகைய அணுகுமுறை தமிழ் - சிங்களத் தலைவர்களிடையே கருத்து மோதலுக்கு இடமளித்தது. 1921ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் பிரதேச ரீதியாக தெரிவு செய்யப்பட்ட சிங்களவரின் எண்ணிக்கை 13ஆக காணப்பட தமிழரின் எண்ணிக்கை 3ஆக இருந்தது. ஆனால், ஏற்கனவே நிலவி இருந்த சட்டசபையில் உத்தியோகபற்றற்ற சிங்கள – தமிழ் தலைவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய சமமாகவே காணப்பட்டது. இதனால், இலங்கைத் தமிழர்கள் தாம் சிறுபான்மையினர் என்பதைச் சிந்திக்க மறுத்து விட்டார்கள் என்பது மட்டுமல்ல மறந்தும் விட்டார்கள். இந்நிலையில் சிறுபான்மையினர் என்னும் போது இலங்கைவாழ் ஏனைய சிறுபான்மை மக்களையே சுட்டி நிற்கின்றது. தமிழ்த் தலைவர்கள் தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையிலான பிரதிநிதித்துவ விகிதாசாரம் 1920ஆம் ஆண்டுக்கு முந்திய நிலைக்கு எடுத்துச் செல்ல வேண்டும் எனக்கோரிக்கை விடுத்தனர்.

இவ்வாறான ஒரு நிலையில் தான் மேற்கு மாகாணத்தில் தமிழருக்கென தனியான ஒரு தொகுதியை ஒதுக்குவதாக 1918ஆம் ஆண்டில் யாழ்ப்பாண சங்கத்துக்கு வழங்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றும்படி கேட்டுக்கொண்டார்கள். இதுவே யாழ்ப்பாண சங்கத்தினை கவர்ந்து இழுப்பதற்கு காரணமாகவும் அமைந்தது. ஆனால், பீரிஸ் சமரவிக்கிரம ஆகியோர் இத்தகைய உத்தரவாதம் யாழ் சங்கத்துக்கு வழங்கவில்லை என்று உறுதியாகக் கூறிவிட்டார்கள். அத்துடன் அது பெரும்பான்மை இனத்தவருக்குரியது என்றும் வடக்கே சென்று தெரிவு செய்யும்படி ஆலோசனை கூறவும் முற்பட்டார்கள். அவ்வாறு உத்தரவாதம் தந்தால் அறிக்கையை காட்டும் படி யாழ் சங்கத்தை கேட்டுக்கொண்டார்கள். உண்மையில் அப்பேச்சுவார்த்தை எழுத்து வடிவம் பெறாது வாய்ப்பேச்சாகவே இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு எழுதாத வாக்குறுதியை தாங்கள் அவ்வாறு வழங்கவில்லை என்று பகிரங்கமாக வெளிப்படுத்தியமை தமிழ் மக்கள் குறிப்பாக தமிழ்த் தலைவர்கள் இலங்கை தேசிய காங்கிரசின் மீது நம்பிக்கை வைப்பது பயன் தராச் செய்கை என உணரத் தொடங்கினார்கள். இதன் மூலம் சிங்களத் தலைமை உறுதிப்பாடு அற்றதென்பதையும் அவர்கள் நிலைநாட்டினார்கள் என்று கூறலாம். ஆகவே அடிப்படை ரீதியான வேறுபாடுகள் காணப்பட்டாலும் தேசிய காங்கிரசுடனான தொடர்பை ஈற்றில் துண்டிப்பதற்கு நேரடிக் காரணமாக அமைந்தது. மேற்கு மாகாணத்தில் தமிழருக்கென தனியான தேர்தல் தொகுதியை ஒதுக்குவது தொடர்பான பிணக்கேயாகும்.

இலங்கையில் கடமை புரிந்த தேசாதிபதிகளுள் மனிங் மிகத் திறமையும், மதிநுட்பமும் வாய்ந்தவராக இருந்தமையால் உரிய முறையில் எதிர்கொண்டு இந்தியாவைப் போன்று பெரியதோர் இயக்கமாக வளர்ந்து விடாமல் தடுப்பதற்குரிய அணுமுறையைக் கையாண்டார். 1919 ஆம் ஆண்டு தோற்றம் பெற்ற இலங்கைத் தேசிய காங்கிரஸ் இந் நாட்டின் இரு பெரும் இனங்களையும் உள்ளடக்கி இருப்பதால் இந்த இயக்கம் காலப் போக்கில் தமது ஆட்சிக்கே முடிவு கட்டும் ஒரு சக்தியாக மாறிவிடும் என்பதை உணர்ந்த மனிங் தமது பிரித்தாளும் கொள்கையை வெகு இலகுவாகப் பயன்படுத்தினார். மனிங் அதற்குப் பயன்படுத்திய மிகப்பிரதான ஆயுதம் தமிழரின் விசேட தொகுதிக்கான கோரிக்கையாகும்.

பிரித்தாளும் மனிங்கின் கைவண்ணத்தைப் பற்றி பேராசிரியர் கே. எம். டி. சில்வா (K.M.de. Silva) "....உண்மையாக இலங்கையின் அரசியல் யாப்பு சீர்திருத்தங்களில் ஏற்பட்ட பிரச்சினைகளை அவர் கையாண்ட விதம் பிரித்தாளும் கொள்கையை நடைமுறைப்படுத்த வழிகாட்டும் பாடநெறி நூலாக கொள்ளத்தக்கது." என மதிப்பிடுகின்றார். தமிழ்த் தலைவர்களை இலங்கை தேசிய காங்கிரசில் இருந்து பிரித்தெடுத்து அதன் தேசிய தன்மையை இழக்க வைப்பதில் மனிங் வெற்றி கண்டார். ஆனால் மனிங் எவ்வளவு திறமையுடன் புத்திசாதுரியத்துடன் செயற்பட்டு இருந்தாலும் சிங்களத் தலைவர்கள் தகுந்தளவு எச்சரிக்கையுடன் நடந்து கொண்டு இருந்தால் பிரிவினைச் சக்திகள் நாட்டில் வேரூன்றுவதினின்றும் ஓரளவுக்காவது தடுத்து இருக்க முடியும். இன்னொரு வகையில் கூறின் இனப் பிளவு ஏற்படுவதற்கு சிங்களத் தலைவர்களின் சொந்தச் செயற்பாடே காரணமாக அமைந்தது எனலாம்.

ஆகவே பிரித்தானியரின் பிரித்தாளும் கொள்கை காரணமாகவும், தமிழ் - சிங்களத் தலைவர்களிடையே எழுந்த கருத்து முரண்பாடுகளினால் அல்லது விட்டுக்கொடுக்கும் தன்மை இல்லாததாலும் 1921 ஆம் ஆண்டு ஓகஸட் மாதம் தமிழ்த் தலைவர்கள் இலங்கை தேசிய காங்கிரஸில் இருந்து விலகி தமிழர் மகாசபை என்ற அமைப்பினை உருவாக்கினார்கள். இலங்கை தேசிய காங்கிரஸ், இந்தியத் தேசிய காங்கிரஸ் போன்று ஒரு வெகுசன இயக்கமாக சாதாரண பாமர பொது மக்களினது விருப்பு வெறுப்புக்களையும் அபிலாசைகளையும் வெளிப்படுத்தக் கூடியதாக அமையாததன் காரணம் தான் இந்தப் பிளவுக்கு அடிப்படைக் காரணம் என்றும் ஓரளவு கூறலாம். மேலும், தமிழர் மகா சபையானது தமிழருக்கு கூடியளவு பிரதிநிதித்துவம் பெறுவதிலும் காங்கிரசை எதிர் கொள்ளும் அமைப்பாகவும் இயங்கியது. இலங்கைத் தேசிய காங்கிரஸ் தமிழர் மகா சபையை கவர்ந்திழுக்கும் முயற்சியில் ஈடுபட்ட போதும் மேற்கு மாகாண விசேட தொகுதி விடயத்தில் சமரச முடிவுக்கு வர முடியவில்லை. ஆகவே தமிழ்த் தலைவர்கள் ஏமாற்றப்பட்டதன் நிலைமையையும், தமிழ் மக்கள் பிரித்தானியரிடம் நலவுரிமைகளைப் பெற்றுக் கொள்ளவும் தமது உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கவும் தற்போது உறுதி பூண்டார்கள்.

ஆகவே இலங்கைத் தேசிய காங்கிரஸ் எல்லாச் சமூகங்களுக்கும் குரல் கொடுக்கும் தேசியத் தன்மையை முற்றாக இழந்து விட்டது எனலாம். அதாவது இலங்கைத் தேசிய காங்கிரஸ் ஒரு சிங்கள பௌத்த தேசிய வாதத்தினை பேணி வளர்க்கும் ஒரு இயக்கமாகவே இயங்கியது.

20ம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்பத்தின் முடிவுக்காலத்திலே தமிழ் - சிங்களத் தலைவர்களிடையே கருத்து முரண்பாடுகள் மிகத் தெளிவான முறையில் வெளிக்கொணரப்பட்டன. மேலும் இலங்கைத் தேசிய காங்கிரஸில் இருந்து வெளியேறிய தமிழ்த் தலைவர்களது செயற்பாடானது வேறுபட்ட இன நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் - சிங்களத் தலைவர்கள் ஒருபோதும் ஒரு தேசிய ரீதியான அமைப்பின் கீழ் ஒன்றுபட முடியாது என்பதை முதலில் சுட்டிக் காட்டியது. அதேவேளை தமிழ்த் தலைவர்களின் விசேட தொகுதி பற்றிய கோரிக்கையை சிங்களத் தலைவர்கள் பிழையான வழியைக் கையாண்டு ஒரு குழப்ப நிலைக்கு இடமளித்தார்கள். சிங்களத் தலைவர்கள் சமரசத் தன்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, நெகிழ்ந்து செல்லும் தன்மை என்பவற்றைக் கையாண்டு இலங்கைத் தமிழரை அரவணைத்துச் செல்லும் போக்கை கையாளுவதற்குப் பதிலாக பிடிவாதக் குணமும், நீண்ட நோக்கமற்ற, நெகிழ்ந்து கொடுக்காத, ஒரு கொள்கையை பின்பற்ற முன்வந்தமை மிகவும் வருந்தத்தக்க செயலாகும். அவர்கள் பரந்த மனதுடன் விட்டுக் கொடுத்து இருந்தால் நாட்டின் சிங்கள – தமிழ் இனப்பிளவு நன்கு வேரூன்றிச் செல்வதை தடுத்து இருக்க முடியும். அல்லது தாக்கத்தின் வேகத்தினை ஓரளவு குறைத்து இருக்க முடியும் ஆனால் அவர்கள் இவ்வாறான அணுகுமுறையைப் பின்பற்ற தவறியமை இலங்கைத் தேசிய காங்கிரஸ் பிளவடைந்து அதன் மூலம் தமிழ் - சிங்கள இனப்பிளவு பரவலாக்கப்பட்டு அது தொடர்ச்சியாக நீண்ட காலத்துக்கு வளர்ச்சியடைவதற்கும் அத்தகைய செய்துறை அடிப்படையாக அமைந்தது அல்லது வழிகோலியது எனலாம்.

சிங்கள மகாசபை 1919 ஆம் ஆண்டு காலூன்றியது. இதன் தோற்றத்துக்கு இலங்கை தேசிய காங்கிரசின் ஆதரவும் வழிவகுத்து இருந்தது. ஆரம்பத்தில் இச்சபை நாட்டில் நகரப்பகுதியில் வாழ்ந்த மத்தியதர பிரிவினரையே உள்ளடக்கியிருந்தது. பின்னர் நாட்டில் கிராமப்பகுதியில் உள்ள பாமர மக்களை நோக்கி நகர்ந்தது. சிங்கள மகா சபையின் பிரதான நோக்கம் பௌத்த மதம், பௌத்தநாடு என்பதை நிலை நிறுத்துவதாகும். ஏனையவர்கள் அந்நியர்கள் என்ற கருத்தையும் பரப்பி இருந்தது. இதன் வழி இலங்கை சிங்கள பௌத்த நாடு என்ற கருத்தில் சிங்கள மகாசபை இருந்தமையால் ஏனைய சிறுபான்மை இனத்தின் உரிமைகளை அங்கீகரிக்க மறுத்தது. இதன்படி சிங்கள மகாசபை இலங்கையின் பல்லினத்தன்மையை நிராகரிக்கின்ற போக்கினையே காணமுடிகின்றது. இப்போக்கு இனமுரண்பாட்டை தூண்டிவிடுமேயன்றி ஐக்கியத்தை பேண முடியாது என்பதனை இன்றைய அரசியல் நடவடிக்கை வரை அவதானிக்க முடிகின்றது. இதன்படியே சிறுபான்மையினங்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன.

ஜி.ஜி. பொன்னம்பலமும் அவரது அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியும் பிரித்தானியரிடமிருந்து சிங்கள பௌத்த தலைவர்களின் தனியாதிக்க அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு முனைந்தனர். அதன்படி பெரும்பான்மை இனத்தவருக்கும் சிறுபான்மையினத்தவருக்கும் சமநிலையான பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்பதே பொன்னம்பலத்தின் கோரிக்கையாகும். 1936 இல் தனிச்சிங்க மந்திரிசபை அமைக்கப்பட்டமையானது இத்தகைய சமபிரதிநிதித்துவக் கோரிக்கையை முன்வைப்பதற்கு காரணமாகும். ஆனால் இக்கோரிக்கையை சிங்களத் தலைவர்கள் கடுமையாக எதிர்த்தனர். ஆயினும் இக்கோரிக்கையினை வழங்கியிருந்தாலும் கூட சிறுபான்மையினத்துக்கு அது பாதுகாப்பாக இருந்திருக்காது. சிறுபான்மை உறுப்பினர் ஒரு சிலரையாவது ஆட்சியில் உள்ளவர்கள் ஒரு சில சலுகைகளைக் கொடுத்து தம்பக்கம் கவர்ந்து இழுக்கமுடியும். ஆகவே இது எவ்வகையிலும் சிறுபான்மை இனத்துக்கு பாதுகாப்பாக அமையமாட்டாது எனலாம்.

காலனித்துவ காலத்தில் இருந்து வளர்ந்து வந்த இனமுரண்பாடுகள் இலங்கையின் சுதந்திரத்தை தொடர்ந்து வேகமாக வளர்ச்சியடைந்தது. சுதந்திரத்தை அடுத்து பெரும்பான்மையினத் தலைவர்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையே இதற்கு காரணமாகும். இலங்கையின் பல்லினத்தன்மையைக் கருத்தில் கொள்ளாது பெரும்பான்மை சிங்கள மக்களின் நலவுரிமைகளைப் பேணும் நோக்கில் அரச கொள்கைகள் உருவாக்கப்பட்டன. இந்த வகையில் 1948, 1949 ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட குடியுரிமை, வாக்குரிமைச்சட்டங்கள் கோடிட்டுக்காட்ட கூடிய விடயமாகும்.

இலங்கையில் பெருந்தோட்டச் செய்கையை மேற்கொள்வதற்கு பிரித்தானியாவுக்கு பெருமளவிலான ஊழியப்படை தேவைப்பட்டது. அந்த ஊழியத்தை வழங்குவதற்கு இலங்கையில் வாழ்ந்த மக்கள் முன்வரவில்லை. இதனால் குறைந்த ஊழியத்துக்கு தொழிலாளர்களை தென்னிந்தியாவில் இருந்து கொண்டு வருவதற்கான வாய்ப்பு பிரித்தானியாவுக்கு இருந்தது. எனவே 1830 ஆம் ஆண்டிலிருந்து தென்னிந்தியாவில் இருந்து தொழிலாளர்களை வரவழைத்தது. இந்தியர்களின் வருகை குறித்து ஆரம்பத்தில் சிங்கள பெரும்பான்மையிடையே இனவாத உணர்வுகள் வெளிப்படவில்லை. டொனமூர் ஆணைக்குழு சர்வசன வாக்குரிமையை அறிமுகப்படுத்தியதைத் தொடர்ந்து தென்னிந்தியத் தொழிலாளர்களை எதிரிகளாக நோக்க முற்பட்டார்கள்

சுதந்திரத்தை அடுத்து அப்பொழுது பிரதமமந்திரியாக இருந்த டி. எஸ். சேனநாயக்கா 1948, 1949ஆம் ஆண்டுகளில் குடியுரிமை வாக்குரிமைச்சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியதன் மூலம் இந்திய வம்சாவழி மக்கள் அரசியல் அனாதையாக்கப்பட்டார்கள். இதன் மூலம் சிங்கள பெரும்பான்மையின் நலனும் சிங்களத் தலைவர்கள் நோக்கமும் நிறைவேற்றப்பட்டுள்ளன. என்பதை 1952ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின் மூலம் அறிந்து கொள்ளலாம். 1947ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் மலையக மக்கள் சார்பில் 07 பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற முடிந்தது ஆனால் 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் ஓர் உறுப்பினரையும் பெறமுடியவில்லை.

மலையக மக்களது குடியுரிமை வாக்குரிமை பறிக்கப்பட்டதைத் தொடர்ந்து சிறுபான்மை இனமான தமிழ் பேசும் மக்களின் மொழியுரிமை 1956ஆம் ஆண்டு பறிக்கப்பட்டது. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் தமிழ்ப்பேசும் மக்கள் குறிப்பாக வடபகுதி தமிழ்மக்கள் ஆங்கிலமொழி மூலம் கல்வி பெற்று இருந்தமையால் கூடியளவு வேலை வாய்ப்பை பெற்று இருந்தார்கள். இதனை சகித்துக்கொள்ள முடியாத சிங்களத் தலைவர்கள் குறிப்பாக எஸ்.டவிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா சிங்களம் மட்டும் அரசகருமமொழி என்ற சட்டத்தை நிறைவேற்றினார்.

இதனால் தமிழ்ப் பேசுவோர் பாதிக்கப்பட்டார்கள். அப்பொழுது கொல்வின் ஆர்.டி. சில்வா "இரு மொழி எனில் ஒரே நாடு ஒரு மொழி எனில் இரு நாடுகள்" என்ற கருத்தை பாராளுமன்ற விவாதத்தில் முன்வைத்தார். இச்சட்டத்தை எதிர்த்து தமிழரசுக்கட்சி தலையில் காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தினார்கள். ஆனால் இதனை சில சிங்கள குண்டர்கள் சத்தியாக்கிரகப் போராட்டம் தொடர்ந்து நடைபெறாமல் குழப்பிவிட்டார்கள். அதனை ரெஜிசிறிவர்த்தனா " காலி முகத்தில் இருந்த சத்தியாக்கிரகிகள் மீது சிங்களக் குண்டர்கள் தாக்குதலை நடத்தினார்கள். சிலர் தூக்கி எறியப்பட்டதுடன் சிலர் மேல் சிறு நீரும் கழித்தனர். சாத்வீக முறையில் நடைபெற்ற எதிர்ப்பை முறியடிக்க பிரயோகித்த சிங்களவரின் காட்டுமிராண்டித்தனமான பலாத்காரம் தமிழர்களின் மனதில் எப்பொழுதும் நிலைத்து நிற்கும்" என குறிப்பிட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற வன்முறையில் 150க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டார்கள். இச்சட்டம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் தமிழ் பேசுவோர் பாதிக்கப்பட்டார்கள். உதாரணமாக தமிழர்கள் தொழில் நுணுக்கத்துறையில் 1956ஆம் ஆண்டில் 60% பெற்று இருக்க 1965ஆம் ஆண்டு 30% மட்டுமே பெற்று இருந்தார்கள். இதன் மூலம் பெரும்பான்மை இனமான சிங்களவர்கள் நன்மை அடைந்து கொண்டார்கள். எனவே எதிர்கால விளைவுகளை ஆராயாது குறுகிய நோக்கில் முன்வைக்கப்பட்ட சிங்களம் மட்டும் என்னும் சட்டம் இன முரண்பாட்டை கூர்மைப்படுத்தியது எனலாம்.

1960ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அமைத்த பொழுதும் அதற்கு பெரும்பான்மை இருக்கவில்லை. இச்சந்தர்ப்பத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிப்பதன் மூலம் தங்கள் கோரிக்கையை நிறைவேற்றுவதாக சமஷ்டிக் கட்சியிடம் கேட்டுக் கொண்டது. இதனை நம்பி சமஷ்டிக் கட்சியினரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து அரசாங்கத்திற்கு எதிராக வாக்களித்தனர். இதன் மூலம் அரசாங்கம் பதவியில் இருந்து நீக்கப்பட்டது. அதேயாண்டு யூலை மாதம் நடைபெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பெருபான்மையான ஆசனங்களைப் பெற்று அரசாங்கத்தை அமைத்துக் கொண்டது. ஆயினும் சமஷ்டிக் கட்சியின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. இதன் மூலம் சமஷ்டிக் கட்சியினர் ஏமாற்றப்பட்டார்கள்.

1970ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான கூட்டு அரசாங்கம் அரசாங்கத்தை அமைத்துக் கொண்டது. இவ்வரசாங்கம் பல்கலைக்கழக அனுமதியில் திறமை அடிப்படையிலான போட்டிப்பரீட்சையை கைவிட்டு தரப்படுத்தல் முறையை நடைமுறைப்படுத்தியது. இத்தரப்படுத்தல் முறை தமிழ் மக்களை குறிப்பாக தமிழ் மாணவர் சமூதாயத்தை கொடூரமாக பாதித்தது. உதாரணமாக 1970ஆம் ஆண்டில் மருத்துவ துறைக்கு 50% மான தமிழ் மாணவர்கள் அனுமதி பெற்று இருந்தார்கள். ஆனால் தரப்படுத்தலுக்குப் பின்பு 1975ஆம் ஆண்டில் 17.5% ஆக குறைவடைந்து இருந்தது. தமிழ் மாணவர்களின் முன்னேற்றத்துக்கு பிரதான மார்க்கமாக இருந்த உயர்கல்வியில் பாதிப்பை ஏற்படுத்தியமையால் அம்மாணவர்கள் தன்னெழுச்சிக்காக போராடத் தொடங்கினார்கள். இது தமிழ்ப்போராளிக் குழுக்களின் எழுச்சிக்கு காரணமாகியது. அதாவது அகிம்சை ரீதியான போராட்டத்திலிருந்து ஆயுதரீதியான போராட்டத்திற்கு இளைஞர்களை இது தூண்டியது எனலாம்.

1970ம் ஆண்டு பொதுத் தேர்தலைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான அரசாங்கம் புதியதொரு அரசியலமைப்பை நடைமுறைப்படுத்தியது. இவ்வரசியல் திட்டத்தில் சிங்கள மொழி அரசமொழியாகவும், பௌத்த மதம் அரசமதமாகவும் அங்கீகரிக்கப்பட்டது. பல இன மதங்களைக் கொண்ட மக்கள் வாழுகின்ற இலங்கையில் ஓர் இனத்திற்கு ஒரு மதத்திற்கு முன்னுரிமை கொடுப்பது என்பது பாரபட்சமான முடிவாகும். இதனால் இன முரண்பாடு மேலும் வளர்ச்சியடையத் தொடங்கியது.

பெரும்பான்மைச் சிங்கள மக்களின் அபிலாசைகளையும் தேவைகளையும் பூர்த்தி செய்யும் நோக்கிலே முதலாம் குடியரசு அரசியல் திட்டம் உருவாக்கப்பட்டது. இதனால் சிறுபான்மை இன மக்கள் கவனத்திற் கொள்ள முடியாத ஒரு யாப்பாகவே அது காட்சியளித்தது. அத்துடன் ஐக்கிய தேசியக்கட்சியும் இந்த யாப்பு சிறுபான்மை மக்களின் ஒப்புதலைப் பெறாமல் உருவாக்கப்பட்டதாக விமர்சித்தது. ஐக்கிய தேசியக் கட்சி தாம் ஆட்சிக்கு வந்தால் இவ் யாப்பினை மாற்றியமைத்து சிறுபான்மை மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளிப்பதாக வாக்குறுதி அளித்தது. இது ஒருவகையில் சிறுபான்மை தமிழ் மக்களை கவர்ந்தெழுப்புவதற்கான சிறந்ததொரு கருவியாக ஐக்கிய தேசியக்கட்சி பயன்படுத்திக் கொண்டது எனலாம். 1977ஆம் ஆண்டு யூலை மாதம் நடந்த பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டிற்கும் அதிகப்படியான ஆசனங்களைப் பெற்று இருந்த ஐக்கிய தேசியக்கட்சி 1978 பெப்ரவரியில் புதியதொரு அரசியல் திட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வந்தது. இவ் யாப்பில் 18வது சரத்தில் சிங்கள மொழிக்கு அரசகரும மொழி அந்தஸ்து வழங்கப்பட்டது. இவ் யாப்பின் 19வது சரத்து தேசிய மொழி தமிழ்மொழி, சிங்கள மொழி எனக் குறிப்பிடுகின்றது. வேலைவாய்ப்பு பெறுவதில் அல்லது வேலையை உறுதிப்படுத்துவதற்கு சிங்கள மொழியில் தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும் என்பது இவ்யாப்பில் முக்கியமாதொரு ஏற்பாடாக இருந்தது. இவ் ஏற்பாடு தமிழ்ப் பேசுவோர் பெற்று இருந்த வேலை வாய்ப்புக்களை திட்டமிட்டவகையில் பறித்தெடுப்பதற்கு ஒரு மார்க்கமாக கையாளப்பட்டது.

இவ் யாப்பில் இரண்டாம் அத்தியாயத்தில் பௌத்த மதம் அரசமதம் எனக்குறிப்பிடுகின்றது. இந்தியாவைப் போன்று இலங்கையும் மதச்சார்பற்ற அரசாக அமைவது இன முரண்பாட்டை

தனிப்பதற்கு ஒரு வழியாக அமையும். ஆனால் இன்று வரை இந்நிலை ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பொதுவாக நோக்குமிடத்து 1972, 1978ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்புக்கள் பெரும்பான்மையின சிங்கள மக்களை மாத்திரம் கவனத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட அரசியல் யாப்புக்களாகவே காணப்படுகின்றன எனலாம்.

1956, 1958, 1977, 1983 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற இனக்கலவரங்கள் இனமுரண்பாட்டை பகிரங்கமாக வெளிக்காட்டிய விடயமாகும். குறிப்பாக 1983ஆம் ஆண்டு இனக்கலவரம் இனமுரண்பாடு என்பது ஆயுத முரண்பாடாகவும் வன்முறைமிக்கதாகவும் வளர்வதற்கு மேலும் காரணமாகியது. 1983 யூன் 23 திகதி யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் 13 இலங்கை இராணுவத்தினர் கொலை செய்யப்பட்டனர். தொடர்ந்து இனக்கலவரம் கொழும்பில் வெடித்தது. அதைத் தொடர்ந்து இனக்கலவரம் ஏனைய இடங்களுக்கும் பரவியது. கொழும்பில் மட்டும் 350 தமிழர்கள் கொல்லப்பட்டதாக அரசாங்கம் தெரிவித்தது. ஆனால் தமிழ் தரப்பின்படி கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை 2000 ஆகும். 15 அகதிமுகாம்களில் 80000 – 100000 மக்கள் அகதிகளாக தஞ்சம் புகுந்தார்கள். இக்கலவரம் தமிழர்களையும் அவர்களது தொழில்துறையையும் தொழில் சார் அமைப்புக்களையும் அழித்தொழித்து தமிழர் பொருளாதாரத்தை நாசமாக்குவதே முழு நோக்கமாக இருந்ததாக கருதப்படுகின்றது இவ்வாறான சிங்கள பேரினவாதத்தின் மறுபக்கம் தமிழ்த் தேசிய வாதம் தீவிரமாக வலுப்பெறுவதற்கு வழிசமைத்தது எனலாம் அவை ஒவ்வொன்றும் இனமுரண்பாட்டின் வளர்ச்சிப்போக்குகளை பலப்படுத்தும் விடயங்களாக அமைந்தது எனலாம்.

## 1.2 சமாதான முன்னெடுப்புக்கள்

இலங்கையின் இனமுரண்பாடு ஒரு புறம் வளர்ச்சியடைந்து செல்ல மறுபுறம் அதனைத் தீர்ப்பதற்கு பல்வேறுபட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அம்முயற்சிகள் ஒவ்வொன்றையும் மிகச்சுருக்கமாக இங்கு ஆராயப்பட்டுள்ளன.

### பண்டா - செல்வா ஒப்பந்தம்

1956அம் ஆண்டு சிங்களம் மட்டும் அரசகருமமொழி என்னும் சட்டத்தைத் தொடர்ந்து தமிழ்பேசும் மக்கள் அரசாங்கத்திற்கு அகிம்சைரீதியான எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். சமஷ்டிக் கட்சியினர் 1957ஆம் ஆண்டு ஒகஸ்ட் 20 திகதிக்கு முன்னர் இந்நாட்டில் சமஷ்டி முறை ஒன்றை உருவாக்க பிரதம மந்திரியும் பாராளுமன்றமும் தவறுமிடத்து வெகுசன இயக்கம் ஒன்றைத் தொடங்குவதாக அரசாங்கத்திற்கு தெரிவித்தது. சாத்வீகப் போராட்டத்தில் இறங்குவதற்கு நடவடிக்கை எடுத்த வேளையில் பிரதமர் இவ் எதிர்ப்பை இலகுவாக தீர்ப்பதற்கு சமஷ்டிக் கட்சியினரை பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். இப்பேச்சுவார்த்தையின் விளைவாக பண்டா – செல்வா ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

இவ்வொப்பந்தத்தில் பிரதேசசபை அமைத்தல் வடக்கு கிழக்கு மாகாண நிர்வாகத்தில் தமிழை உபயோகித்தல் போன்ற பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. ஆயினும் இவ்வொப்பந்தத்திற்கு பாரிய எதிர்ப்பு தென்னிலங்கையில் ஏற்பட்டது. குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா தலைமையில் சிங்கள மக்களின் உரிமைகளையும் பிரதேசங்களையும் தமிழர்களுக்கு பிரதமர் பேரம் பேசி விற்று விட்டார் எனக் கூறி கண்டி தலதாமாளிகைக்கு பாதயாத்திரை மேற்கொண்டார்கள். அத்துடன் சில பௌத்த பிக்குகள் பிரதமரின் வாசஸ்தலத்திற்கு முன்னால் அமர்ந்து இருந்து ஒப்பந்தத்தை கைவிடுமாறு சத்தியாக்கிரகம் செய்தார்கள். எனவே பல்வேறு புறங்களில் எதிர்ப்புக்கள் ஏற்பட்டதை உணர்ந்த பிரதமர் ஒப்பந்தத்தை கைவிடுவதாக அறிவித்தார். ஏனெனில் தென்னிலங்கை தான் பிரதமரின் அரசியல் இருப்புக்கான ஆதீக்க தளமாகும். தென்னிலங்கையில் வெளிப்பட்ட எதிர்ப்புக்களை எதிர்கொள்ளாது ஒரு தலைப்பட்சமாக ஒப்பந்தத்தை கைவிட்டமை சந்தர்ப்பவாத அரசியலையே

வெளிக்காட்டியது எனலாம். உண்மையில் இது நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் இனமுரண்பாட்டின் வேகத்தை ஆரம்பத்திலேயே ஓரளவு தடுத்திருக்கலாம்.

## டட்லி – செல்வா ஒப்பந்தம்

1965 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஆனால் ஐக்கிய தேசியக்கட்சி சமஷ்டிக் கட்சியை தன்பக்கம் உள்வாங்குவதன் மூலம் பெரும்பான்மையை நிருபிக்க முடிந்தது. இரு கட்சித் தலைவர்களுக்கும் இடையிலான நீண்ட பேச்சுவார்த்தையின் பின்னர் டட்லி – செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இவ்வொப்பந்தத்தில் பிரதானமாக மாவட்டசபைகள் அமைத்தல், வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியில் நிர்வாகம் நடத்தல் குடியேற்றம் போன்ற பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. ஆயினும் இவ்வொப்பந்தத்திற்கு பாரிய எதிர்ப்பு தென்னிலங்கையில் ஏற்பட்டது. குறிப்பாக இடதுசாரிகள் எதிர்ப்புத் தெரிவித்தன. லங்காசமசமாஜக்கட்சியின் அரசியல் ஏடான ஜனதின "இரத்மலானையை தமிழ் நகர் ஆக்க முயற்சி, சிங்கள பௌத்தர்களே எழுக, ஒப்பந்தத்தை கிளித்தெறி" என்ற தலைப்பில் செய்தி வெளியிட்டது.

அப்போதைய எதிர்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் இவ்வொப்பந்ததிற்கு எதிராக குரல் கொடுத்தது. ஆயினும் அரசாங்கம் 1966 ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியமை ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கையாகும். இருந்த போதிலும் ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட ஏனைய விடயங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை. இதனால் தமிழர்கள் காலத்திற்கு காலம் ஏமாற்றப்படுகின்றார்கள் எனக் கூறி சமஷ்டிக்கட்சியும் அரசாங்கத்திலிருந்து வெளியேறியது.

## இலங்கை - இந்திய ஒப்பந்தம

இனப்பிரச்சினை உச்ச நிலையை அடைந்திருந்த சந்தர்ப்பத்திலேயே இந்தியா இலங்கையின் இனப்பிரச்சினையில் நேரடியாகத் தலையீடு செய்தது. 1983 ஆம் ஆண்டு இனக்கலவரம் தொடர்பாக அறிந்து கொள்வதற்காக அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி வெளியுறவு அமைச்சரான நரசிம்மராவினை இலங்கைக்கு அனுப்பினார். இதன் பின்பு இந்தியா திரும்பிய நரசிம்மராவ் "இலங்கை நிலைமை கவலையை வெளிப்படுத்துவதாக உள்ளது. இனக்கலவரத்தை கட்டுப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் தவறிவிட்டது" எனக் குறிப்பிட்டார்.

இனக்கலவரத்தை அடுத்து பிரதமர் இந்திரா காந்தி பார்த்தசாரதி என்பவரை இலங்கைக்கு இனப்பிரச்சினைக்கு பரிகாரம் காண்பதற்கான மார்க்கம் பற்றி ஆலோசனை நடத்துவதற்காக அனுப்பி இருந்தார். பார்த்தசாரதி இலங்கை அரசியற் கட்சித்தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு முன்மொழிவினை முன்மொழிந்தார். அது ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள மாவட்ட அபிவிருத்திச் சபைகள் இணைந்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிராந்திய சபைகளாக இயங்கும் வகையில் அமைக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார். அப்பிராந்தியங்களின் சட்டவாக்க அதிகாரம் பிராந்திய சபைகளிடம் ஒப்படைக்கப்படும் அதேவேளை அமுலாக்க அதிகாரத்தையும் அச்சபை கொண்டிருக்கும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக சர்வகட்சி மாநாடு நடைபெற்றபோது அதற்கு சில சக்திகள் எதிர்ப்புத் தெரிவித்தன. குறிப்பாக SLFP, பௌத்த மதநிறுவனங்கள் எதிர்ப்புத் தெரிவித்ததுடன் தமிழர்களுக்கு கூடியளவு அதிகாரம் வழங்குவதாகவும் குற்றம் சாட்டினர். எவ்வாறாயினும் பார்த்தசாரதியின் முயற்சி பயன் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் பல கட்சிகள் சர்வகட்சி மாநாட்டில் இருந்து வெளியேறியமையினாலாகும்.

1984ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இந்திராகாந்தி படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவரது மகனான ராஜீவ் காந்தி இந்தியப் பிரதமராக பொறுப்பேற்றுக்கொண்டார்.

ராஜீவ் காந்தியும் இலங்கையின் இனமுரண்பாட்டைத் தீர்த்து வைப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். 1985 ஆம் ஆண்டு இந்தியாவின் வெளியுறவுச் செயலாளரான ரொமேஸ் பண்டாரி இலங்கையின் இனமுரண்பாட்டுத் தீர்வுக்கான முயற்சியில் ஈடுபட்டார். இலங்கை இராணுவத்திற்கு தமிழ்க்குழுக்களுக்கும் இடையில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டது. அத்துடன் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் தமிழ்க் குழுக்களுக்கும் இடையில் பூட்டான் தலைநகர் திம்புவில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அரசாங்கத்தின் சார்பில் அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் சகோதரர் எச். டபிள்யூ. ஜெயவர்த்தனா தலைமை தாங்கி மாவட்ட அபிவிருத்திச் சபைகள் என்பதே இனமுரண்பாட்டிற்கு தீர்வாக அமையும் என முன்மொழிந்தார். இதனை தமிழ் குழுக்கள் நிராகரித்ததுடன் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையையே தமது பிரதான குறிக்கோள் எனவும் குறிப்பிட்டன. ஆனால் எச். டபிள்யூ. ஜெயவர்த்தனா சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ளப்பட முடியாது எனக் குறிப்பிட்டார். மேலும் நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்தத்தை இலங்கை இராணுவம் ஒரு தலைப்பட்சமாக மீறுகின்றது எனக் கூறி தமிழ்க்குழுக்கள் பேச்சுவார்த்தையில் இருந்து வெளிநடப்புச் செய்தன. இதனால் திம்பு பேச்சுவார்த்தை இடைநடுவில் குழம்பி போய் விட்டது எனலாம்.

1986ஆம் ஆண்டு மே மாதம் இலங்கை இனமுரண்பாட்டிற்கான தீர்வு தொடர்பாக கலந்துரையாடுவதற்காக சிதம்பரம், நட்வாசிங் ஆகிய இரு அமைச்சர்களை இந்தியப் பிரதமர் இலங்கைக்கு அனுப்பினார். இக்குழுவின் நீண்ட கலந்துரையாடல்கள் பேச்சுவாத்தையின் மூலம் டிசெம்பர் 19ம் திகதி பிரேரணை எனக் குறிப்பிடப்படும் ஒரு முன்மொழி ஒன்று முன்வைக்கப்பட்டது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான விடயங்கள் பின்வருமாறு

1. இரண்டு மாகாணசபைகள் உருவாக்கப்படும் ஒன்று வட மாகாணத்திலும் மற்றையது மீள் வரையப்பட்ட கிழக்கு மாகாணத்திலும் உருவாக்கப்படும்.

2. கிழக்கு மாகாணத்தின் எல்லைகள் மீள் வரையப்படுதல்.

3. கிழக்கு மாகாணத்தில் சிங்களப் பெரும்பான்மையினர் வாழும் பிரதேசம் தனியாகவும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசம் தனியாகவும் பிரித்தெடுக்கப்படும்.

4. இலங்கையில் துணை ஜனாதிபதி உருவாக்கப்பட்டு அவர் தமிழ் மக்களில் இருந்து தெரிவு செய்யப்பட வேண்டும்.

ஆனால் இப்பிரேரணைக்கு சிங்களத் தரப்பிலிருந்தும், தமிழ்த்தரப்பிலிருந்தும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. எனவே இந்தியாவின் இனமுரண்பாட்டிற்கான தீர்வு முயற்சி தற்பொழுதும் பயன் அளிக்கவில்லை.

1987ஆம் அண்டு இலங்கையின் இனமுரண்பாடு மேலும் கூர்மையடையத் தொடங்கியது. 1987ஆம் ஆண்டு மே மாதம் ஒப்பரேசன் லிபரேசன் (Operation Liberation) என்ற பெயரில் யாழ்ப்பாணத்தில் வடமராட்சியை நோக்கி இலங்கை இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டது. ஆனால் இந்திய அரசாங்கம் இந்நடவடிக்கையை விரும்பவில்லை. தனது நிலைமையினை இந்தியா பின்வருமாறு இலங்கை அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தியது.

1. இந்திய அரசாங்கத்திற்கு இவ் இராணுவ நடவடிக்கை கவலையளிக்கின்றது.

2. 1983ஆம் ஆண்டிலிருந்து பெரும் எண்ணிக்கையினை தமிழ்மக்கள் கொல்லப்பட்டும், துன்பத்திற்கும் ஆளாக்கப்படுகின்றார்கள்.

3. இச் செயலால் தென்னிந்திய மக்கள் பெரும் கவலை அடைந்துள்ளார்கள்.

4. இப்படை நடவடிக்கை இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான புரிந்துணர்வுடன் கூடிய அரசியல் தீர்வினை தடைப்படுத்துகின்றது.

5. ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா யுத்த நடவடிக்கைகளை மீள் பரிசீலனை செய்யாது விட்டால் இந்தியா தனது கொள்கைகளை மீள் பரிசீலனை செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்படும்.

இக்கருத்துக்களை இலங்கை அரசாங்கம் எற்றுக்கொள்ளாமல் யுத்த நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டது. பொருளாதாரத் தடை வடபகுதியில் இருந்தமையால் மக்கள் பட்ட கஷ்டங்களைக் கருத்தில் கொண்டு இந்தியா வான்வழி மூலம் உணவு பொட்டலங்களை வட பகுதியில் போட்டது. இந் நடவடிக்கையை இலங்கை வன்மையாக கண்டித்தது.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் இதனை பின்வருமாறு கண்டித்தார். இந்த உணவு வினியோக நடவடிக்கையானது இலங்கையின் உள் விவகாரங்களில் தலையீடு செய்கின்ற அதேவேளை பிரதேச ஒருமைப்பாட்டையும் சிதறடிக்கின்ற முயற்சியாக அமைந்துள்ளது. இம் முயற்சியானது இலங்கைக்கு நெருக்கடி தருவதாக அமைந்துள்ளது. ஆயினும் இலங்கை யுத்த நடவடிக்கையை நிறுத்தி இந்தியாவுடன் நெருக்கமான உறவைப் பேண தீர்மானித்தது. அதன் ஒரு வெளிப்பாடே 1987 ஆம் ஆண்டு ஆடி மாதம் 29 ந் திகதி இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தமாகும். இவ்வொப்பந்தம் இலங்கையின் இனப்பிரச்சினையின் வரலாற்றுப் போக்கில் பிரபல்யம்மானதும் சர்சைக்குரிய ஒப்பந்தமாகவும் அமையலாயிற்று.

இவ்வொப்பந்தம் ஒரு சாரரின் சம்மதம் இன்றி செய்யப்பட்ட திருமணம் என்று கண்டிக்கப்பட்டது. ஆயினும் இந்திய அரசாங்கத்தின் அழுத்தத்தின் காரணமாக இணங்கிச் செயற்பட வேண்டியதாயிற்று எவ்வாறு இருந்த போதிலும் இவ்வொப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் இந்தியா வெற்றியடையமுடியவில்லை. எனினும் இலங்கையில் மாகாணசபை ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட்டு இன்றுவரை நடைமுறையில் உள்ளது. இருந்த போதிலும் இலங்கையின் இன முரண்பாடு தீர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மாறாக பிராந்திய நலன் பேணுவதே இந்தியாவின் பிரதான நோக்கமாக அமைந்திருந்தது.

## இலங்கையின் இனமுரண்பாட்டைத் தீர்ப்பதற்கு நோர்வேயின் பங்களிப்பு

இலங்கையின் இனமுரண்பாட்டைத் தீர்ப்பதற்கு இந்தியா பல்வேறுபட்ட முயற்சிகளை எடுத்த போதிலும் அவை எல்லாம் பயன் அளிக்க முடியவில்லை. ஆயினும் தீர்வில் ஒரு சில முன்னேற்றங்களை ஏற்படுத்தின. தீவிரமடைந்த இனமுரண்பாட்டின் வேகத்தைக் கருத்தில் கொண்டு இலங்கை அரசாங்கத்திற்கு விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பரஸ்பரம, புரிந்துணர்வு, நம்பிக்கை, தொடர்பாடல் என்பவற்றை ஏற்படுத்தி இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வரும் ஏற்பாட்டாளராக நோர்வே தலையிடத் தொடங்கியது.

நோர்வேயின் வெளிநாட்டுக் கொள்கையின் பிரதானமானது உலக நாடுகளில் காணப்படும் முரண்பாடுகளுக்கு சமாதான வழியில் தீர்ப்பதற்கு உதவுதல் என்பதாகும். அதன்படி ஆபிரிக்காவில் சூடான் கரிபியனில் ◻ய்ட்டி, தென் அமெரிக்காவில் கௌத்தமாலா, மத்திய கிழக்கில் ஸ்ரேல் பலஸ்தீனம் போன்ற நாடுகளில் முரண்பாட்டைத் தீர்த்து வைப்பதில் நோர்வே மூன்றாம் தரப்பாகச் செயற்பட்டுள்ளது. இவ்வாறே இலங்கையின் இனமுரண்பாட்டுத் தீர்விலும் நோர்வே ஏற்பாட்டாளராக செயற்பட்டது.

2000ஆம் ஆண்டு பெப்ரவரி 16இல் நோர்வேயின் வெளிநாட்டு அமைச்சர் க்னற் வொல்வெக் இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு சமாதான முயற்சியில் நோர்வே ஈடுபட ஆர்வம் கொண்டிருப்பதாக அறிவித்தார். அத்துடன் இலங்கையின் சமாதான நடவடிக்கைக்கு விசேட தூதுவராக எரிக்சொல்கெய்ம் என்பவர் நோர்வே அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டார்.

ரணில் விக்கிரமசிங்க 2001 டிசம்பர் 5ஆம் திகதி இடம் பெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலில் பெரும்பான்மை பெற்று அரசாங்கத்தை அமைத்துக் கொண்டார். மேலும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து எரிக்சொல்கெயம் இரு தரப்பினருடனும் பேச்சுவார்த்தையை நடத்தி 2002 பெப்பிரவரியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று எற்படுத்தப்பட்டது. இவ் ஒப்பந்த நடைமுறையை கண்காணிக்கும் பொருட்டு நோர்வேயின் தலைமையின் கீழ் ஸ்கண்டி நேவியன் நாடுகளான பின்லாந்து, சுவீடன், டென்மார்க், ஐஸ்லாந்து ஆகிய நாடுகளைச் சார்ந்தவர்களை உறுப்பினராகக் கொண்ட கண்காணிப்புக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. இரு தரப்பினரையும் தாய்லாந்து, நோர்வே, ஜேர்மனி, யப்பான் போன்ற நாடுகளில் பல சுற்றுப் பேச்சுவார்த்தையில் ஈடுபட நோர்வே அரசாங்கம் பங்காற்றியது. இப்பேச்சுவார்த்தையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தடையாக உள்ள காரணிகள் பற்றி இங்கு ஆராயப்பட்டன. அதிகாரப்பங்கீடு தொடர்பாக அமெரிக்கா சோவியத் யூனியன் சுவிஸ்லாந்து, பெல்ஜியம் போன்ற நாடுகளின் அரசியலமைப்பில் எவ்வாறு அதிகாரப்பங்கீடு இடம் பெற்றுள்ளது என்று இப்பேச்சுவாத்தைக்குழு ஆராய்ந்தது. இவ்வாறு பல பயன் உள்ள முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது இலங்கை ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க ரணில் அரசாங்கத்தின் கீழ் இருந்த மூன்று அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்றுக் கொண்டதைக் தொடர்ந்து ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்குமிடையில் இழுபறி நிலை ஏற்பட்டது. இதனால் நோர்வே தற்காலிகமாக தமது பணிகளை இடைநிறுத்தியது. அதுமட்டுமன்றி ரணில் தலைமையிலான அரசாங்கம் கலைக்கப்பட்டு புதிய பாராளுமன்றத் தேர்தலும் நடைபெற்றது. இதில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பெரும்பான்மை பெற்று அரசாங்கத்தை அமைத்துக் கொண்டது. 2004 மே 10இல் தூதுக் குழு ஒன்றை இலங்கைக்கு நோர்வே அனுப்பியது. இந்நிலையில் மக்கள் விடுதலை முன்னணி போன்ற கட்சிகள் பல கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது. இவ்வாறான எதிர்ப்புக்கள் மத்தியிலும் நோர்வேயின் பங்களிப்பை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பயன்படுத்திக் கொண்டார். அவர் குறிப்பிடும் போது "நோர்வேயை விலத்தி சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும் எனவும் நோர்வேயை ஒதுக்காவிட்டால் அதைத் தாங்கள் எதிர்ப்பதாகவும் கூறினர். இவ்வாறானவர்களை வைத்துக் கொண்டு எப்படித்தான் நாட்டை ஆட்சி செய்வதென்பது தமக்குத் தெரியவில்லை" என்றார். பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இரு தரப்புக்கிடையிலும் இடம் பெற்றன. ஆயினும் ஒப்பந்ததை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்ட குறைபாட்டின் காரணமாக பேச்சுவார்த்தை மேலும் தொடரமுடியாமல் போய்விட்டது. ஆயினும் இலங்கையின் இனமுரண்பாட்டைத் சமாதானமாக தீர்த்து வைப்பதற்கு பல்வேறுபட்ட முயற்சிகளையும் எடுத்தது. எவ்வாறு இருந்த போதிலும் நோர்வேயின் பங்களிப்பால் இரு தரப்பின் நிலைப்பாட்டிலும் ஒரு நெகிழ்ச்சி தன்மை ஏற்பட்டதுடன் இலங்கையின் இனப்பிரச்சினை சர்வதேசமயமாக்கப்பட்டது. எனினும் நோர்வேயின் நீண்டகால சமாதான முயற்சி பயன் அளிக்க முடியாமல் போய்விட்டது. மாறாக யுத்த நெருக்கடி முன் எப்பொழுதும் இல்லாதவாறு அதிகரிக்கத் தொடங்கியது. இதனால் இனமுரண்பாட்டுக்கான தீர்வு முயற்சி மந்த நிலை அடையலாயிற்று.

தொகுத்து நோக்கும் போது இலங்கையில் அரசியல் அபிவிருத்திப் போக்கானது இலங்கையர் தேசியம் என்ற ஐக்கிய உணர்வின் மூலமாக கட்டியெழுப்பப்படாது இனவாத உணர்வின் மூலமாகவே கட்டியெழுப்பப்பட்டது. இது ஏற்கனவே பிளவுபட்டிருந்த நிலையில் இருந்த தமிழ் சிங்கள உறவினை மேலும் விரிவடைய செய்வதற்கு வாய்ப்பளித்தது. இதன் மூலம் பேரினவாதம் ஸ்தாபனப்படுத்தப்பட்டு இன, மத, மொழி உணர்வினை வளர்ப்பதாக அமைந்தது. இதன் தாக்கத்தில் இருந்தே தமிழர்கள் தம்மை பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் தமிழர் நலன் பேணும் உரிமையைப் பாதுகாக்கும் பல கட்சிகள், அமைப்புக்கள், இயக்கங்கள் உருவாகின. இத்தகைய நிலை இன முரண்பாட்டை வளர்த்துச் சென்றதே ஒழிய அதனை தணிய வைப்பதாக அமையவில்லை.

பன்மைச் சமூதாய அமைப்புக்களையுடைய ஒரு நாட்டில் வெவ்வேறு இனங்கள் மத்தியில் மற்றைய இனத்தவர்களைப் பற்றி தவறான எண்ணங்களும் முரண்பாடுகளும் ஏற்படுவது எந்தவொரு வகையிலும் அதிசயமான விடயமல்ல. ஆனால் அவை காலத்துக்கு காலம் களையெடுக்கப்படாமல் அல்லது சமாதானமாக தீர்க்கப்படாமல் திட்டமிட்டு வளர்க்கப்பட்டு வந்ததால் இன முரண்பாடு வளர்ச்சியடைந்தது எனலாம். அரசியல் தலைவர்கள் அணுகுமுறையை அவதானிக்கின்ற பொழுது ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக, ஆட்சியை தக்கவைத்துக் கொள்வதற்காக, ஆட்சியை பலப்படுத்திக் கொள்வதற்காக இனவாதத்தை கையாண்டனர். அதேபோன்று ஒப்பந்தங்கள் பரிகாரங்கள் என்று சொல்லப்படுபவை எல்லாம் ஆட்சியாளர்களுக்கு நெருக்கடிகள் ஏற்படும் போது அதிலிருந்து விடுபடுவதற்காக உருவாக்கப்பட்டவையாகும். அவ்வாறே கைவிடப்படுகின்றன. மத்தியஸ்த முயற்சியில் ஈடுபட்ட நாடுகளும் தமது பிராந்திய நலன், சுய நலன் என்பவற்றை கூடியளவு பேணுவதிலே அக்கறை செலுத்துகின்றன. சுருக்கமாக கூறின் இனமுரண்பாட்டுடன் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துணர்வு, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, நெகிழ்ந்து செல்லும் போக்கு ஆகியவற்றைக் கையாண்டு குறுகிய கால, நீண்டகால திட்டத்துடன் பேச்சுவார்த்தை மூலம் இனமுரண்பாட்டுக்குத் தீர்வைக் காண்பதே சாலச்சிறந்ததாகும்.

## References


1. K.M.de. Silva, G.H. Peris (ed.) 2000 Pursuit of Peace In Sri Lanka: Past Failures And Future Prospects, International Center For Ethnic Studies, Candy 2000

2. Rave Kant Dubai, (1993) Indo – Sri Lanka Relations, With Special Reference To The Tamil Problem, Deep & Deep Publications, New Delhi.

3. A.J. Wilson (1988) the Break Up Of Sri Lanka, the Sinhalese – Tamil Conflict. C. Hurst Company, London

4. A.J. Wilson (1974) Politics in Sri Lanka 1947 – 1973, the Macmillan Press Ltd, London.

5. K.M.de. Silva (1981) a History of Sri Lanka, Oxford University Press, New Delhi.

6. Victor Ivan (1989) Sri Lanka in Crisis Road to Conflict, Arvada Book Publishing Service, Sri Lanka.

7. A.J. Wilson (1994) S.J.V. Chelvanayakam And The Crisis Of Sri Lankan Tamil Nationalism 1947 – 1977, Lake House, Book Shop. Colombo.

8. A.J. Wilson (2000) Sri Lankan Tamil Nationalism Penguin Book, New Delhi.

9. K.M.de. Silva (1999) Sri Lanka Ethnic Conflict, Management And Resolution, International Centre For Ethnic Studies, Candy.

10. Kumari Jayawardana (1985) Ethnic And Class Conflicts In Sri Lanka, Centre For Social Analysis, Dehiwala.